திருச்சிற்றம்பலம்

# 44-ஆம் திருமுறை மாநாடு 2024




# ஓதும்போட்டிப் பாடல்கள்

## திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்

வெளியீடு

## திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு

*ஒலிப்பேழையில் பாடியவர்:*

**சிவத்திரு தேவார இசைமணி பாலமுருகன் ஓதுவார்**

*ஒலிப்பேழையில் முன்னுரை:*

**சிவத்திரு கண்ணா கண்ணப்பன்**

*செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு*

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

**(02-01-2018 க்கும் 01-01-2020 க்கும் இடையே பிறந்தவர்கள்–** N/K1/K2)

(பங்கு பெறுவோர் மூன்று பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : இந்தளம்** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**சடையா எனுமால் சரண்நீ எனுமால்**
**விடையா எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே.**

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**பண்: காந்தாரபஞ்சமம** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்**
**கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது**
**நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே.** **02**

திருச்சிற்றம்பலம்

**சேக்கிழார் அருளிய பெரியபுராணம்**

**ராகம்: மத்திமாவதி** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.** **12.00.001**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R4, R5 & R6

**(02-01-2015 க்கும் 01-01-2018 க்கும் இடையே பிறந்தவர்கள்–** P1/P2/P3)

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

திருஞானசம்பந்தர் தேவாரம்

பண்: **பழந்தக்கராகம்** **தாளம்: ஆதி**

திருச்சிற்றம்பலம்

**பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி**
**ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்**
**ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்**
**கூத்தீ ரும்ம குணங்களே.**

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

**பண் : காந்தாரம்** தாளம் : ஜம்பை

திருச்சிற்றம்பலம்

**கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்**
**முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை**
**அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி**
**எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.**

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர்** அருளிய **தேவாரம்**

**பண் : புறநீர்மை** தாளம் :**ஆதி**

திருச்சிற்றம்பலம்

**அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி**
**முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்**
**சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்**
**கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே**

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்**: **மத்தியமாவதி** தாளம் :**ஆதி**

திருச்சிற்றம்பலம்

**நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்**
**மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்**
**உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்**
**சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R7, R8 & R9

**(02-01-2012** க்கும் **01-01-2015** க்கும் இடையே பிறந்தவர்கள் **P4/P5/P6)**
(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : வியாழக்குறிஞ்சி** தாளம் :**ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**நடைமரு திரிபுர மெரியுண நகைசெய்த**
**படைமரு தழலெழ மழுவல பகவன்**
**புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய**
**இடைமரு தடையநம் மிடர்கெட லெளிதே.**

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர்** அருளிய **தேவாரம்**

**பண் : பழம் பஞ்சுரம்** தாளம் :**ஆதி**

திருச்சிற்றம்பலம்

**முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா**
**சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே**
**பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய**
**அத்தா ஆலங் காடாஉன் னடியார்க் கடியேன் ஆவேனே**

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

ராகம்: மோகனம் தாளம் :**ஆதி**

**திருச்சிற்றம்பலம்**

**விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை**
**மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்**
**தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்**
**பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்**
**கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட**
**அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்**

**திருச்சிற்றம்பலம்**

**திருமூலர் அருளிய திருமந்திரம்**

பண் : தாளம் :

திருச்சிற்றம்பலம்

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு **R10 & R11**

**(02-01-2008** க்கும் **01-01-2012** க்கும் இடையே பிறந்தவர்கள் **Sec 1- 4)**
(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண் : நட்டபாடை** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை**
**இறையணி வளையிணை முலையவள் இணைவன தெழிலுடை யிடவகை**
**கறையணி பொழினிறை வயலணி கழுமல மமர்கன லுருவினன்**
**நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி கழல்தொழன் மருவுமே.**

திருச்சிற்றம்பலம்

## **திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்
திருவிருத்தம்

ராகம்: தாளம் :

திருச்சிற்றம்பலம்

**வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா வென்றென்**
**றோதியே மலர்கள் தூவி யொருங்கிநின் கழல்கள் காணப்**
**பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்**
**ஆதியே யால வாயில் அப்பனே யருள்செ யாயே.**

திருச்சிற்றம்பலம்

## **சுந்தரர்** அருளிய **தேவாரம்**

**பண்** : **சீகாமரம்** தாளம் : **மிஸ்ர சாபு**

திருச்சிற்றம்பலம்

**பரந்த பாரிடம் ஊரி டைப்பலி**
**பற்றிப் பாத்துணுஞ் சுற்ற மாயினீர்**
**தெரிந்த நான்மறையோர்க் கிட மாய திருமிழலை**
**இருந்து நீர்தமி ழோடி சைகேட்கும்**
**இச்சை யாற்காசு நித்தல் நல்கினீர்**
**அருந்தண் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதிரே.**

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

ராகம்: மோகனம் தாளம் :

**திருச்சிற்றம்பலம்**

**உருத்தெரியாக் காலத்தே**
**உள்புகுந்தென் உளம்மன்னிக்**
**கருத்திருத்தி ஊன்புக்குக்**
**கருணையினால் ஆண்டு கொண்ட**
**திருத்துருத்தி மேயானைத்**
**தித்திக்குஞ் சிவபதத்தை**
**அருத்தியினால் நாயடியேன்**
**அணிகொள்தில்லை கண்டேனே**

**திருச்சிற்றம்பலம்**

ராகம்: தாளம் :

திருச்சிற்றம்பலம்

## <u>சேரமான் பெருமாள் நாயனார் அருளியது</u>

**திருச்சிற்றம்பலம்**

**பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்**
**மேனி பொலிந்திலங்கும்**
**மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்**
**வீழ்சடை வெள்ளிக்குன்றம்**
**தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்**
**மால்விடை தன்னைக்கண்ட**
**என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்**
**ஆகிய ஈசனுக்கே.** **01**

**திருச்சிற்றம்பலம்**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R12,R13 & R14

(02-01-2008 க்கு முன் பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )

திருச்சிற்றம்பலம்

# திருப்பதிகப் பாராயணம்

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

## 04.001 திருவதிகைவீரட்டானம்

**பண்: கொல்லி**

திருச்சிற்றம்பலம்

**கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.** 01

**நெஞ்சம் உமக்கே இடமாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.** 02

**பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலையில் பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்**

பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 03

முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்ன நடையார் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 04

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 05

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 06

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 07

வலித்தேன்மனை வாழ்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே

கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 08

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலைபிணி என்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பே அமையும் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 09

போர்த்தாய் அங்கோரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

*நன்னெஞ்சே !*

திருச்சிற்றம்பலம்

நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

பொழிப்புரை :

நல்லநெஞ்சமே! நீ நாள்தோறும் அவனை நினைவாயாக. சாகும் நாளையும் உயிர்வாழும் நாளையும் யார் அறிவார்கள். ஆதலின் சாய்க்காட்டை அடைந்து அங்குள்ள எம்பெருமானுக்கு நாளும் பூக்களைத் தலையில் சுமந்து சென்று அருச்சித்தும் செவிகளால் அவன் புகழ் மொழிகளைக்கேட்டும், நாள்தோறும் நாவினால் அவன் திருப்பெயரை நவின்றேத்தியும் செயற்படின் நல்வினைப்பயன் பெறலாம்.

திருச்சிற்றம்பலம்

**திருமுறைகள் ஒலிக்கட்டும்! திருவருள் பெருகட்டும்**